செய்தி வெளியீடு எண்: 036 நாள் : 21.01.2015

## செய்தி வெளியீடு

## அனைத்து மாவட்டங்களிலும் அம்மா சிமெண்ட் விற்பனை

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 26.09.2014 அன்று ''அம்மா சிமெண்ட் திட்டம்'' செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கடந்த 05.01.2015 அன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவரங்கத்தில் சிமெண்ட் விற்பனை தொடங்கப்பட்டது. குறைந்த விலையில் சிமெண்ட் கிடைப்பதால் இத்திட்டமானது மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

அம்மா சிமெண்ட் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள 440 கிட்டங்கிகளில் இருப்பு வைக்கப்பட்டு மூட்டை ஒன்றுக்கு 190/– ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டுவோர்கள் 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் அதிக பட்சம் 1500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை சலுகை விலையில் சிமெண்ட் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட கட்டட திட்ட வரை படத்தையோ அல்லது கிராம நிர்வாக அலுவலர் / வருவாய்துறை அலுவலர் / பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வையாளர் / பஞ்சாயத்து யூனியன் சாலை ஆய்வாளரின் சான்றிதழையோ பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

வீடுகள் புதுப்பிக்க மற்றும் பழுது பார்க்க 10 முதல் 100 மூட்டைகள் வரை சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் ஒரு மூட்டை சிமெண்ட் 220/– ரூபாய் என்ற விலையில் வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது இந்தத் திட்டங்களின் பயனாளிகளுக்கும் ‘‘அம்மா சிமெண்ட்’’ திட்டத்தின் கீழ் சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.190/–க்கு வழங்கப்பட்டு வருகிறது.

அம்மா சிமெண்ட் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் சிமெண்ட் கிடைப்பதால் வீடு கட்டும் செலவினத்தில் சிமெண்டிற்கான செலவு பாதியாக குறைய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிட்டங்கிகளிலும் ‘‘அம்மா சிமெண்ட் திட்டம்’’ மூலம் 20.01.2015 வரை சுமார் 20,000 மெட்.டன் இருப்பு வைக்கப்பட்டு 5000 மெ.டன்கள்(1 லட்சம் மூட்டைகள்) விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை மூலம் ஏழை எளிய மற்றும் நடுத்தர வருமானமுள்ள மக்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

பொது மக்கள் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டம் தொடர்பான செயல்பாடுகள் குறித்து தெரிவிக்க தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் இயங்கும் கட்டணமில்லா தொலைபேசி சேவை எண்.1800 425 22000 மூலம் காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**